# செந்தமிழ் இலக்கணம்

## இரண்டாம் படிவம்—சிறப்புப்பகுதி

வித்துவான், V. நரசிம்மன், M. A.

வித்துவான், C. இராமசாமி

தமிழ் ஆசிரியர்-கழக உயர்நிலைப்பள்ளி, வத்தலகுண்டு.

★

ஜெனரல் புக் கம்பெனி

கும்பகோணம்

பதிப்புரிமை]

[விலை 0—7—0

முதற் பதிப்பு—1954
இரண்டாம் பதிப்பு—1955

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்.

# முன்னுரை

செந்தமிழ் இலக்கணம் என்னும் இந்நூல், முதல் மூன்று படிவச் சிறப்புத் தமிழ் பயிலும் மாணவர்க்கு உரியதாக 1951-ஆம் ஆண்டில் அரசியலார் வெளியிட்டுள்ள புதிய பாடத் திட்டத்தை (syllabus) அடிபோற்றி அம்மாணவர்கட்கு நன்கு பயன்படும் வகையில் இயற்றப் பட்டுள்ளது.

உதாரணங்களால் விதியைக் கற்பிப்பதாகிய அநுமான முறை (inductive method) இந்நூலில் கையாளப்படுகின்றது. மாணவர் விருப்பத்தோடு இலக்கணம் கற்க இது ஏதுவாகும். இதில் கொடுக்கப் பட்டுள்ள உதாரணங்கள் எளிமையும் விளக்கமும் உடையவை. ஆங்காங்குப் புதிய முறையில் போதிய பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. இறுதியிலுள்ள தேர்வு வினாக்கள் கற்றவற்றைக் கருத்திற்குக் கொணர்ந்து பயில பயன்படும்.

கல்வித் துறை போகியோர் இதனை ஆதரிப்பார்களென நம்புகின்றோம்.

ஆக்கியோர்கள்.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I. | எழுத்து: | | |
| (1) | குறில், நெடில் | .... | 1 |
| (2) | மெய்யெழுத்து வகை | .... | 2 |
| II. | சொல் ஆக்கம்: | | |
| (1) | விகுதி | .... | 6 |
| (2) | இடைநிலை | .... | 9 |
| III | சொல்: | | |
| (1) | செந்தமிழ், கொடுந்தமிழ் | .... | 11 |
| (2) | வழு, வழுவமைதி | .... | 12 |
| (3) | வழூஉச் சொற்களும் திருத்தமும் | .... | 14 |
| (4) | குறிப்புப் பெயர்கள் | .... | 15 |
| (5) | வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் | .... | 16 |
| (6) | காலம் | .... | 18 |
| (7) | திணை | .... | 19 |
| (8) | பால் | .... | 20 |
| (9) | எண் | .... | 21 |
| (10) | இடம் | .... | 22 |
| (11) | வேற்றுமை | .... | 25 |
| (12) | சொல்லிலக்கணம் கூறுதல் | .... | 30 |
| (13) | சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடுதல் | .... | 32 |

**IV. புணர்ச்சி:**

(1) எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி .... 34
(2) உயிர் முன் உயிர் புணருதல் .... 37
(3) வல்லெழுத்து மிகும் இடங்கள் .... 38
(4) மகர ஈறு .... 39

**V. அணி:**

(1) உவமை அணி .... 41
(2) உருவக அணி .... 43

**VI. நிறுத்தற் குறிகள்:**

பயிற்சி வினாக்கள் .... 46

# இரண்டாம் படிவம் — சிறப்புப் பகுதி

25 NOV

## I. எழுத்து

### 1. குறில், நெடில்

*அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.* இந்தப் பன்னிரண்டு எழுத்துக்களும் உயிர் எழுத்துக்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். இவற்றில்,

*அ, இ, உ, எ, ஒ*—இந்த ஐந்து எழுத்துக்களையும் உச்சரித்துப் பாருங்கள். இவை குறுகிய ஓசை உடையனவாய் இருக்கின்றன அல்லவா? ஆதலால் இந்த ஐந்து எழுத்துக்களும் ***குற்றெழுத்துக்கள்*** எனப்படும்.

குற்றெழுத்தாவது, குறுகிய ஓசையை உடைய எழுத்து. குற்றெழுத்து, *குறில்* என்று சொல்லப்படும்.

உயிரெழுத்துக்களில் *ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ,* ***ஔ***—என்னும் ஏழு எழுத்துக்களையும் உச்சரித்துப் பாருங்கள். அவை நீண்ட ஓசையை உடையனவாய் இருக்கின்றன அல்லவா? ஆதலால் அவை ***நெட்டெழுத்துக்கள்*** எனப்படும்.

நெட்டெழுத்தாவது நீண்ட ஓசையை உடைய எழுத்து. நெட்டெழுத்து, *நெடில்* என்றும் சொல்லப்படும்.

உயிரும் மெய்யும் சேர்ந்த எழுத்து உயிர்மெய் எழுத்து என்பதை அறிவீர்கள். ஆதலால் உயிர் எழுத்துக்களிலுள்ள குறில்கள் மெய்யெழுத்துக்களோடு சேர்ந்து உயிர்மெய்க் குறில்கள் ஆகும். உயிர்க்குறில் 5-ம், 18 மெய்யெழுத்துக்களோடும் சேருவதனுல், மொத்தம் $5 \times 18 = 90$ உயிர்மெய்க் குறில்கள் உண்டாகும்.

(உ-ம்) க் + அ = க
ச் + இ = சி
த் + உ = து

உயிர் எழுத்துக்களிலுள்ள 7 நெடில்களும், 18 மெய்யெழுத்துக்களோடும் சேருவதால், மொத்தம் $7 \times 18 = 126$ உயிர்மெய் நெடில்கள் உண்டாகும்.

(உ-ம்) க் + ஆ = கா
ங் + ஈ = ஙீ
ச் + ஊ = சூ

உயிர்மெய்க்குறில் 90-ம், உயிர்மெய் நெடில் 126-ம் சேர்ந்து, மொத்தம் உயிர்மெய் எழுத்துக்கள் 216 சரியாக ஆதலே அறிக.

## 2. மெய்யெழுத்து வகை

### வலி, மெலி, இடை

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்—இந்த எழுத்துக்கள் மெய் எழுத்துக்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இவற்றுள், க், ச், ட், த், ப், ற்.—இந்த ஆறு எழுத்துக்களையும் உச்சரித்துப் பாருங்கள். இவை வலிய ஓசை உடை

யவை ஆகும். ஆதலால் இவை **வலி** அல்லது **வல்லினம்** எனப்படும்.

மெய்யெழுத்துக்களில் **ங், ஞ், ண், ந், ம், ன்**— இந்த ஆறு எழுத்துக்களையும் உச்சரித்துப்பாருங்கள். இவை மென்மையான ஓசை உடையவை. ஆதலால் இவை **மெலி** அல்லது **மெல்லினம்** எனப்படும்.

மெய்யெழுத்துக்களில் **ய், ர், ல், வ், ழ், ள்**-இந்த ஆறு எழுத்துக்களையும் உச்சரித்துப்பாருங்கள். இவை வலிய ஓசை உடையவும் அல்ல; மெல்லிய ஓசை உடையவும் அல்ல; இடைப்பட்ட ஓசை உடையவை. ஆதலால் இவை **இடை** அல்லது **இடையினம்** எனப்படும்.

மேற்கண்டவாறு மெய்யெழுத்துக்கள் மூவகைப் படுதலை அறிக.

வலி அல்லது வல்லினம் 6 எழுத்துக்கள். மெலி அல்லது மெல்லினம் 6 எழுத்துக்கள். இடை அல்லது இடையினம் 6 எழுத்துக்கள். மொத்தம் மெய்யெழுத் துக்கள் $3 \times 6 = 18$ ஆவது காண்க.

உயிர்மெய்யெழுத்தில் மெய்யெழுத்து சேர்ந்து உள்ளது அல்லவா? ஆகையால் அதில் மெய்யெழுத்து வகைகளும் இருக்கும். அவ்வகைகளைப் பொறுத்து உயிர்மெய் எழுத்துக்கள் பின்கண்டவாறு பிரிவுபடும்.

வல்லின மெய் + உயிர் = வல்லின உயிர்மெய் எழுத்து. இவை $6 \times 12 = 72$ ஆவது காண்க.

(உ ம்)  க் + அ = க
        க் + ஆ = கா

மெல்லின மெய் + உயிர் = மெல்லின உயிர்மெய் யெழுத்து. இவை $6 \times 12 = 72$ ஆவது காண்க.

(உ-ம்) ங் + அ = ங
ங் + ஆ = ஙா

இடையின மெய் + உயிர் = இடையின உயிர் மெய்யெழுத்து. இவை $6 \times 12 = 72$ ஆவது காண்க.

(உ-ம்) ய் + அ = ய
ய் + ஆ = யா

இன்னும் நன்கு கவனித்தால் வல்லின உயிர் மெய்கள்.

வல்லினம் + உயிர்க்குறில் = வல்லின உயிர் மெய்க் குறில்.

வல்லினம் + உயிர்நெடில் = வல்லின உயிர் மெய் நெடில் என இருவகைப்படுவதை அறியலாம்.

வல்லின உயிர்மெய்க் குறில்கள் $6 \times 5 = 30$.

(உ-ம்) ச் + எ = செ

வல்லின உயிர்மெய் நெடில்கள் $6 \times 7 = 42$.

(உ-ம்) ச் + ஏ = சே.

இவ்வாறே மெல்லின உயிர்மெய்கள்.

மெல்லினம் + உயிர்க்குறில் = மெல்லின உயிர் மெய்க்குறில்.

மெல்லினம் + உயிர்நெடில் = மெல்லின உயிர் மெய் நெடில் என இருவகைப்படுவதை அறியலாம்.

மெல்லின உயிர்மெய்க் குறில் 6 × 5 = 30.

(உ-ம்) ஞ் + உ = ஞு

மெல்லின உயிர்மெய் நெடில் 6 × 7 = 42.

(உ-ம்) ஞ் + ஊ = ஞூ

இவ்வாறே இடையின உயிர்மெய்கள்.

இடையினம் + உயிர்க்குறில் = இடையின உயிர் மெய்க்குறில்.

இடையினம் + உயிர்நெடில் = இடையின உயிர் மெய் நெடில் என இருவகைப்படுவதை அறியலாம். இடையின உயிர்மெய்க் குறில் 6 × 5 = 30.

(உ-ம்) ய் + ஒ = யொ

இடையின உயிர்மெய் நெடில் 6 × 7 = 42.

(உ-ம்) ய் + ஓ = யோ

## பயிற்சி

1. பின்கண்ட சொற்களிலுள்ள உயிர், மெய் இவை இன்னவகையைச் சேர்ந்தவை எனக் குறிக்க:

அணில், ஆடை, உலகம், ஊக்கம், பங்கு, பந்தயம், தஞ்சம் ஏவல், ஐயம், ஒப்பு, ஓரம், ஔவியம்.

2. பின்கண்ட சொற்களிலுள்ள உயிர்மெய் எழுத்துக்களை இன்னவகை என்று காரணத்தோடு கூறுக:—

காலம், காரியம், ஞாயிறு, செம்மை, அயோத்தி, இராவணன், கோலம், நாமகள், கண்ணாடி, மாதம், விடை.

# II. சொல்லாக்கம்

## 1. விகுதி

முன்வகுப்பில் பகுதியைப் பற்றி அறிந்தீர்கள். வினைச்சொல்லில் முதலில் உள்ள பிரிவு பகுதி என்பதும், அது தொழிலைக் காட்டும் என்பதும் உங்களுக்குத் தெரியும். இப்போது விகுதி, இடைநிலை இவற்றைப்பற்றி அறிவோம்.

விகுதி, சொற்களின் ஈற்றிலுள்ள உறுப்பாம். வினைச்சொற்களில் விகுதி திணை, பால், எண், இடங்களை உணர்த்தும்; அதாவது தொழில் செய்பவனை உணர்த்தும்.

(உ-ம்)

வினைச்சொல் — விகுதி இன்னதை உணர்த்திற்று என்பது

செய்தனன்—அன்—ஆண்பாலை உணர்த்திற்று
பார்த்தான்—ஆன்— ,,

அன், ஆன் என்னும் விகுதிகள் ஆண்பாலை உணர்த்தும்.

கண்டனள்—அள்—பெண்பாலை உணர்த்திற்று
போனாள் —ஆள்— ,,

அள், ஆள் என்னும் விகுதிகள் பெண்பாலை உணர்த்தும்.

வந்தனர் —அர் —பலர்பாலை உணர்த்திற்று
இருந்தார்—ஆர்— ,,

அர், ஆர் என்னும் விகுதிகள் பலர்பாலை உணர்த்தும். மேற்கண்ட ஆறு விகுதிகளும் உயர் திணை, படர்க்கை இடத்தை உணர்த்தியது காண்க. இவற்றுள் அர், ஆர் என்பன பன்மை எண்ணையும், மற்றவை ஒருமை எண்ணையும் உணர்த்தினமை காண்க.

வினைச்சொல்—விகுதி இன்னதை உணர்த்திற்று என்பது

நின்றது — து — ஒன்றன்பாலை உணர்த்திற்று
எண்ணிற்று — று — ,, ,,

து, று—என்னும் விகுதிகள் ஒன்றன்பாலை உணர்த்தும்.

ஓடின — அ — பலவின்பாலை உணர்த்திற்று
ஓடா — ஆ — ,, ,,

அ, ஆ—என்னும் விகுதிகள் பலவின்பாலை உணர்த்தும்.

மேற்கண்ட நான்கு விகுதிகளும் அஃறிணை, படர்க்கை இடத்தை உணர்த்தியது காண்க. இவற்றுள் து, று என்பன ஒருமை எண்ணையும், அ, ஆ என்பன பன்மை எண்ணையும் உணர்த்தின.

ஆகவே அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, று, அ, ஆ என்பன படர்க்கை வினைமுற்று விகுதிகள் ஆகும்.

வினைச்சொல்—விகுதி இன்னதை உணர்த்திற்று என்பது

வந்தனை — ஐ — முன்னிலை ஒருமையை உணர்த்திற்று.
வந்தாய் — ஆய்— ,,
வருதி — இ — ,,

ஐ, ஆய், இ என்னும் விகுதிகள் முன்னிலை ஒருமையை உணர்த்தும்.

நடந்தனிர் — இர் — முன்னிலைப் பன்மையை உணர்த்திற்று.
நடந்தீர் — ஈர் — ,,
நடமின் — மின் — ,,

இர், ஈர், மின் என்னும் விகுதிகள் முன்னிலைப் பன்மையை உணர்த்தும். ஆகவே, ஐ, ஆய், இ, இர், ஈர், மின் என்பன முன்னிலை வினைமுற்று விகுதிகளாகும்.

வினைச்சொல்—விகுதி இன்னதை உணர்த்திற்று என்பது
கண்டனென் என் — தன்மை ஒருமையை உணர்த்திற்று.
கண்டேன் — ஏன் — ,,
கண்டனன் — அன் — ,,
காண்பல் — அல் — ,,

என், ஏன், அன், அல் என்னும் விகுதிகள் தன்மை ஒருமையை உணர்த்தும்.

பார்த்தனம் — அம் — தன்மைப் பன்மையை உணர்த்திற்று.
பார்த்தாம் — ஆம் — ,,
பார்த்தனெம் — எம் — ,,
பார்த்தேம் — ஏம் — ,,
பார்த்தோம் — ஓம் — ,,

அம், ஆம், எம், ஏம், ஓம் என்னும் விகுதிகள் தன்மைப் பன்மையை உணர்த்தும்.

ஆகவே என், ஏன், அன், அல், அம், ஆம், எம், ஏம், ஓம் என்பன தன்மை வினைமுற்று விகுதிகளாம். மேற்கண்டவற்றால் வினைச்சொற்களில் விகுதிகள் தொழிலைச் செய்பவனை உணர்த்தினமை காண்க:

## 2. இடைநிலை

பகுதி, விகுதி இரண்டையும் பற்றி நீங்கள் அறிவீர்கள். இப்போது இடைநிலையைப் பற்றி அறிந்துகொள்ளுங்கள். பெயர் வினைச் சொற்களில் இடையிலுள்ள உறுப்பு இடைநிலை எனப்படும். வினைச்சொற்களில் இடைநிலைகள் காலம் காட்டும்.

(உ-ம்)

| வினைச்சொல் | இடைநிலை | இன்னகாலம் காட்டிற்று என்பது |
| --- | --- | --- |
| செய்தான் | த் | இறந்த காலம் காட்டிற்று |
| உண்டான் | ட் | ,, |
| தின்றான் | ற் | ,, |
| போயினான் | இன் | ,, |
| போனான் | ன் | ,, |
| ஓடியது | இ | ,, |

த், ட், ற், இன், ன், இ என்னும் இடைநிலைகள் இறந்தகாலங் காட்டும் இடைநிலைகளாம்.

| | | |
| --- | --- | --- |
| ஓடுகிறான் | கிறு | நிகழ்காலம் காட்டிற்று |
| ஓடுகின்றான் | கின்று | ,, |
| ஓடாநின்றான் | ஆநின்று | ,, |

கிறு, கின்று, ஆநின்று என்பன நிகழ்காலம் காட்டும் இடைநிலைகளாம்.

படிப்பான் — ப் — எதிர்காலங் காட்டிற்று
செய்வான் — வ் — ,,
ப், வ் என்பன எதிர்கால இடைநிலைகளாம்.

## பயிற்சி

பின்கண்ட வினைமுற்றுக்களில் விகுதி, இடைநிலை இவைகளைத் தனியே எடுத்தெழுதி அவை இன்னின்னவற்றைக் காட்டின எனக் குறிக்க:

வந்தேன், செய்தனன், கண்டது, ஓடாநின்றேன், தருகின்றான், படிப்பான், செய்வேன், வருதி, போதி, கண்டனை, உண்டாய், தருவாய், இருப்பேன், காணுதி, தந்தனென், உண்டோம், தருவேம், காண்பாம், வருவல், நில்லா, ஓடா, நிற்பல், செய்தனெம், இருப்போம்.

# III. சொல்

## 1. செந்தமிழ், கொடுந்தமிழ்

செந்தமிழ் என்பது தமிழ் நாட்டின் ஒரு பகுதியான செந்தமிழ் நாட்டில் பேசப்படும் தமிழ். பாண்டிய நாட்டைச் செந்தமிழ்நாடு என்பர். இந்தச் செந்தமிழ் நாட்டைச் சுற்றியிருந்த தென் பாண்டி நாடு, குட்டநாடு, குடநாடு முதலான 12 நாடுகள் முற்காலத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்திருந்தன. அவற்றில் பேசப்பட்டுவந்த தமிழ் கொடுந்தமிழ் எனப்பட்டது. கொடுந்தமிழாவது சிறிது மாறிய தமிழாம்.

(உ-ம்)

| செந்தமிழ் | | கொடுந்தமிழ் |
|---|---|---|
| தாய் | — | தள்ளை |
| தந்தை | — | அச்சன் |
| தோழன் | — | எலுவன் |
| தோழி | — | இகுளை |
| வயல் | — | செய் |
| சிறு குளம் | — | பாழி |
| சோறு | — | சொன்றி |
| புளி | — | எகின் |
| ஆ | — | பெற்றம் |
| தண்ணீர் | — | வெள்ளம் |
| பூனை | — | பூச்சா |
| சொல்லு | — | செப்பு |

### பயிற்சி

1. இங்கே கூறப்படாத சில கொடுந்தமிழ்ச் சொற்களைக் கூறுக.

2. உங்கள் பாடங்களில் கொடுந்தமிழ்ச் சொற்கள் ஏதேனும் இருந்தால் எடுத்து எழுதுக.

## 2. வழு—வழுவமைதி

பெரியோர் எப்பொருளை எச்சொல்லால் குறித்து வழங்கினார்களோ, அவ்விதமே நாமும் அப்பொருளை அச்சொல்லால் குறித்து வழங்க வேண்டும். அவ்வாறன்றி வேறாக வழங்கினால் அது வழு ஆகும். (வழு—குற்றம்.)

(உ-ம்)

| வழு அல்லாதது | | வழு உள்ளது |
|---|---|---|
| பசுக்கன்று | — | பசுக்குட்டி |
| வாழைக்கன்று | — | வாழைச்செடி |
| குதிரைக்குட்டி | — | குதிரைக்கன்று |
| தென்னம்பிள்ளை | — | தென்னஞ்செடி |
| சிங்கம் கர்ஜிக்கிறது | — | சிங்கம் கத்துகிறது |
| நாய் குரைக்கிறது | — | நாய் கர்ஜிக்கிறது |
| காகம் கரைகிறது | — | காகம் கத்துகிறது |

எழுவாய் பயனிலைகள் திணை, பால், எண், இடம், காலம் இவற்றால் ஒத்து வரவேண்டும். அவ்வாறு வராவிடில் அவையும் வழு ஆகும்.

(உ-ம்) அவன் வந்தது —திணை வழு
அவள் வந்தான் —பால் வழு
பசுக்கள் வந்தது —எண் வழு
நான் வந்தான் —இட வழு
நேற்று வருவான்—கால வழு

சில சிறப்பான காரணங்களால் வழுவானவை களும், வழு அல்லாதவைகளாகப் பெரியோர்களால் கொள்ளப்பட்டு இருக்கின்றன. அவை வழுவமைதி எனப்படும்.

(உ-ம்) முருகனும் ஆடுகளும் வந்தார்கள் — இங்கு எழுவாய் இருதிணைகளும் கலந்ததாக இருக் கிறது. பயனிலையை அதற்கேற்றாற்போல் தர இயலாது. ஆகையால் உயர்திணைச் சிறப்பு நோக்கி உயர்திணைக்குரிய பயனிலை தரப்பட்டது. இது திணை வழுவமைதி.

என் அம்மா அழாதே — இவ்வாறு அன்பினால் ஆண் குழந்தையைப் பார்த்துச் சொல்வது பால் வழுவமைதி.

பூவெல்லாம் உதிர்ந்து விட்டது — பல பூக்கள் உதிர்ந்த விடத்து இவ்வாறு கூறுவது எண் வழுவமைதி.

இராமன் தாய் இவ்விதம் செய்வேனா!— இங்குப் படர்க்கைப் பயனிலை வரவேண்டிய இடத்தில் தன் மைப் பயனிலை வந்தது இடவழுவமைதி.

நீ அங்குச் சென்றால் அழிந்தாய்! — இங்குத் துணிவினால் எதிர்காலம் இறந்தகாலமாக வந்தது காலவழுவமைதி.

## பயிற்சி

1. பின்கண்டவற்றிலுள்ள வழுக்களைத் திருத்துக:
ஆடு மேய்ப்பவள் பாகன்; கோழிக்குட்டி; புலி பிளிறுகிறது; அண்ணன் வந்தது; நாளை சென்றான்.

2. பின்கண்டவை எவ்வகை வழுவமைதி எனக் கூறுக.
இரண்டு கண்ணும் சிவந்தது; இங்கு வந்தால் விழுந்தாய்; பல்லெல்லாம் உதிர்ந்து விட்டது; பசுக்களும் மனிதரும் வந்தனர்; கந்தன் தம்பி இதைச் செய்வேனோ!

# 3. வழூஉச் சொற்களும் திருத்தமும்

சென்ற வகுப்பில் சில வழூஉச் சொற்களையும் அவற்றின் திருத்தத்தையும் பற்றி அறிந்தீர்கள். இவ்வகுப்பிலும் அவ்வகையில் சிலவற்றைக் கூறுவோம்.

(உ - ம்)

| வழூஉச்சொல் | | திருத்தம் |
|---|---|---|
| சுவற்றில் | — | சுவரில் |
| பசுங்கன்று | — | பசுக்கன்று |
| சிகப்பு | — | சிவப்பு |
| தலகாணி<br>தலவாணி<br>தலயாணி | — | தலையணை |
| அரணாள் | — | அரைஞாண் |

| | | |
|---|---|---|
| தவக்களை | — | தவளை |
| எம்பளது | — | எண்பது |
| பொம்பளை | — | பெண்பிள்ளை |
| பாவக்காய் | — | பாகற்காய் |
| வாத்தியார் | — | உபாத்தியாயர் |
| சோறு தின்றான் | — | சோறு உண்டான் |
| கண்ணு | — | கன்று |

பயிற்சி

மேற்கண்ட விதமான வழூஉச் சொற்கள் சிலவற்றையும் அவற்றின் திருத்தத்தையும் கூறுக.

## 4. குறிப்புப் பெயர்கள்

இராமன் பள்ளிக்குச் சென்றான்; அங்கு அவன் கல்வி கற்றான். இவ்வாக்கியத்தில் *அவன்* என்பது இராமனைக் குறிக்கிறது.

பசு வந்தது; அது பால் தந்தது. இவ்வாக்கியத் தில் *அது* என்பது பசுவைக் குறிக்கிறது.

இராமன் தான் நாளை வருவதாகத் தெரிவித் தான். இங்கு *தான்* என்பது இராமனைக் குறிக்கிறது.

*அவன், அவள், அவர், அது, அவை* முதலிய பெயர்கள் வேறு பெயர்களை உணர்த்தும். இவை *குறிப்புப் பெயர்களாம்*. இவற்றைச் *சுட்டுப் பெயர்கள்* என்றும் சொல்வார்கள். ஆங்கிலத்தில் இவை *பிரதிப் பெயர்கள்* (pronouns) என்று சொல்லப்படும்.

இவை வேறு பெயர்களைக் குறிப்பன ஆகையால் குறிப்புப் பெயர்களாம்.

### பயிற்சி

குறிப்புப் பெயர்கள் பொருந்தி வருமாறு ஐந்து வாக்கியங்கள் எழுது.

## 5. வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம்

பின்கண்டவைகளைக் கவனி:

(1) இராமன் முன்னே *வந்தான்*
(2) இராமன் முன்னே *வந்த*
(3) இராமன் முன்னே *வந்து*

இங்குள்ள முதல் உதாரணத்தில் *வந்தான்* என்னும் வினைச்சொல் முடிந்த கருத்தைத் தெரிவிக்கிறது. இரண்டாவது மூன்றாவது உதாரணங்களிலுள்ள *வந்த*, *வந்து* என்னும் வினைச்சொற்கள் முடிந்த கருத்தைப் பெற்றிருக்கவில்லை.

முடிந்த கருத்தைத் தெரிவிக்கும் வினைச்சொல் *வினைமுற்று* என்று சொல்லப்படும்.

முடிவு பெறாத நிலையில் உள்ள வினைச்சொல் எச்சவினை எனப்படும்.

"இராமன் முன்னே வந்த" என்னும் சொற்றொடரில் கருத்து முடிவுபெற வேண்டுமானால் அதனோடு

சிறுவன், பையன், வேலைக்காரன் என ஏதாவது ஒரு பெயர்ச்சொல்லைச் சேர்க்கவேண்டும். அதாவது வந்த என்னும் வினை, ஏதாவது ஒரு பெயரைக் கொண்டு முடிவு பெறுவதாக இருக்கிறது.

*தெரிந்து கொள்:*

பெயரைக்கொண்டு பொருள் முடிவுபெற நிற்கும் **வினை** *பெயரெச்சம்* எனப்படும்.

(உ-ம்) அது கோயிலில் **கண்ட** யானை
இது *செல்லாத* காசு

இங்கு, *கண்ட*, *செல்லாத* என்பவை பெயரெச்சங்கள்.

"இராமன் முன்னே வந்து" என்னும் சொற்றொடர் கருத்து முடிவுபெற வேண்டுமானால், அதனோடு *போனான்*, *சேர்ந்தான்*, *கண்டான்* என்பன போன்ற வினைச்சொற்களுள் ஒன்றைச் சேர்க்கவேண்டும். அதாவது, **வந்து** என்னும் **வினை** ஏதாவது ஒரு வினைச்சொல்லைக் கொண்டு பொருள் முடிவு பெறுவதாக இருக்கிறது.

*தெரிந்துகொள்:*

வினைச்சொல்லைக் கொண்டு பொருள் முடிவுபெற நிற்கும் வினை, *வினையெச்சம்* எனப்படும்.

(உ-ம்) வேலன் அங்கே *நின்று* பார்த்தான்.
அவன் காலம் *சென்று* வந்தான்.

இங்கே, நின்று, சென்று என்பன வினையெச்சங்கள்.

பின்கண்டவற்றைப் படித்தறி :

| வினைப்பகுதி | வினைமுற்று | பெயரெச்சம் | வினையெச்சம் |
| --- | --- | --- | --- |
| செய் | செய்தான் | செய்த | செய்து |
| | செய்கிறான் | செய்கின்ற | செய்ய |
| | செய்வான் | செய்யும் | செய்தால் |
| தா | தந்தான் | தந்த | தந்து |
| | தருகிறான் | தருகிற | தர |
| | தருவான் | தரும் | தந்தால் |

## பயிற்சி

1. பின்கண்ட வினைப்பகுதிகளினின்று வினைமுற்றுக்கள், பெயரெச்ச வினையெச்சங்கள் இவற்றை ஆக்குக.
   இரு, போ, நில், பெறு, படி, நட, காண்.

2. மேற்கண்ட வினைப்பகுதிகளினின்று உண்டாக்கிய வினைமுற்றுக்கள், பெயரெச்ச வினையெச்சங்கள் இவற்றை வாக்கியங்களில் அமைக்க.

# 6. காலம்

வினைச்சொற்கள் எல்லாம், காலத்தை உணர்த்தும். காலம் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்று வகைப்படும். இவற்றை நீங்கள் அறிவீர்கள். இப்போது வினைப் பகுதிகளினின்று முக்கால வினைமுற்றுக்கள் உண்டாகும் விதத்தை அறிந்துகொள்ளுங்கள்.

| வினைப்பகுதி | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| செய் | செய்தேன் | —செய்கிறேன் | —செய்வேன் |
| | செய்தோம் | —செய்கிறோம் | —செய்வோம் |
| | செய்தாய் | —செய்கிறாய் | —செய்வாய் |
| | செய்தீர்கள் | —செய்கிறீர்கள் | —செய்வீர்கள் |
| | செய்தான் | —செய்கிறான் | —செய்வான் |
| | செய்தாள் | —செய்கிறாள் | —செய்வாள் |
| | செய்தார்கள் | —செய்கிறார்கள் | —செய்வார்கள் |
| | செய்தது | —செய்கிறது | —செய்யும் |
| | செய்தன | —செய்கின்றன | —செய்யும் |

### பயிற்சி

மேற்கண்டவாறு பின்கண்ட வினைப் பகுதிகளினின்று முக்கால வினைமுற்றுக்களை உண்டாக்குக.

இரு, போ, வா, நட, நில், விளையாடு, எறி, திரி.

## 7. திணை

*திணை* என்பது பிரிவு. இது படைப்புப் பொருள்களைத் தமிழ் இலக்கணத்தார் பிரித்துள்ள பிரிவைக் குறிக்கும். உலகத்துப் பொருள்களை எல்லாம் தமிழ் இலக்கணத்தார் **உயர்திணை**, ***அஃறிணை*** என்னும் இரு பிரிவுகளில் அடக்கியுள்ளார்கள், **உயர்திணை**யாவது **உயர்ந்த** *பிரிவு;* ***அஃறிணை***யாவது **உயர்ந்தது அல்லாத** *பிரிவு*. ***அஃறிணை — அல் + திணை;*** **உயர்ந்தது அல்லாத *திணை*.**

மக்களும், தேவரும், நரகரும் **உயர்*திணை*யைச் சார்ந்தோர்** ஆவர்,

(உ-ம்) கந்தன், கமலம், இந்திரன்.

உயர்திணை அல்லாத மற்றப் பொருள்கள் எல்லாம் அஃறிணையைச் சாரும்.

(உ-ம்) யானை, காக்கை, வண்டு, கொய்யா, அறுகு

வினைச்சொல்லும் திணையை உணர்த்தும்.

(உ-ம்) கண்டான்—உயர்திணையை உணர்த்திற்று.

தூங்கிற்று—அஃறிணையை உணர்த்திற்று.

### பயிற்சி

1. உயர்திணைப் பெயர்கள் பத்துக் கூறு.
2. அஃறிணைப் பெயர்கள் பத்துக் கூறு.
3. உயர்திணை வினைகள் ஐந்து சொல்லு.
4. அஃறிணை வினைகள் ஐந்து சொல்லு.

## 8. பால்.

*பால்* என்றால் *பிரிவு* என்பது பொருள். இலக்கணத்தில் இது திணையின் பிரிவைக் குறிக்கும்.

உயர்திணையில் மூன்று பால்கள் உண்டு. அவை யாவன,

*ஆண்பால், பெண்பால், பலர்பால்* என்பன.

ஒரு *ஆணைக்* குறிப்பது ஆண்பால் ஆகும்.

(உ-ம்) வேலன், மனிதன், சிறுவன்,

ஒரு *பெண்ணைக்* குறிப்பது பெண்பால் ஆகும்.

(உ-ம்) வள்ளி, இடைச்சி, சிறுமி.

ஆணையினும் பெண்ணையினும் *பலரைக்* குறிப்பது பலர்பால் ஆகும்.

(உ-ம்) மக்கள், சிறுவர், சிறுமியர்.

அஃறிணையில் இரண்டு பால்கள் உண்டு. அவை யாவன : ஒன்றன்பால் பலவின்பால் என்பன.

அஃறிணைப் பொருள்களில் ஒன்றைக் குறிப்பது ஒன்றன்பால் ஆகும்.

(உ-ம்) மரம், பசு, கிளி, நாய்.

அஃறிணைப் பொருள்களில் பலவற்றைக் குறிப்பது பலவின்பால் ஆகும்.

(உ-ம்) மரங்கள், பசுக்கள், கிளிகள், நாய்கள்.
வினைச் சொற்களும் பாலைக் குறிக்கும்.

(உ-ம்) கண்டான் — இது ஆண்பாலைக் குறித்தது.

நின்றாள் — இது பெண்பாலைக் குறித்தது.
வந்தனர் — இது பலர்பாலைக் குறித்தது.
தின்றது — இது ஒன்றன்பாலைக் குறித்தது.
போயின — இது பலவின்பாலைக் குறித்தது.

### பயிற்சி

1. ஐந்து பால்களிலும் வரும் பெயர்ச்சொற்கள் முறையே ஐந்து கூறுக.

2. ஐந்து பால்களிலும் வரும் வினைச் சொற்கள் முறையே ஐந்து கூறுக.

## 9. எண்

எண் என்பது பொருள்களின் எண்ணிக்கையைக் குறிப்பது.

ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை எனப்படும்.

(உ-ம்) வேலன், வள்ளி, ஆடு, காக்கை, மரம்.

பல பொருள்களைக் குறிப்பது பன்மை எனப் படும்.

(உ-ம்) மனிதர், ஆடுகள், காக்கைகள், மரங்கள்.

மேற்குறித்த பால்களில் ஆண்பால், பெண் பால், ஒன்றன்பால் இம் மூன்றும் ஒருமையாம். பலர்பால், பலவின்பால் இரண்டும் பன்மையாம். வினைச் சொற்களும் எண்ணை உணர்த்தும்.

(உ-ம்) வந்தான், சென்றான் — ஒருமையை உணர்த்தின.

வந்தனர், சென்றன—பன்மையை உணர்த்தின.

### பயிற்சி

1. ஒருமைப் பெயர்கள் சில கூறு.
2. பன்மைப் பெயர்கள் சில கூறு.
3. ஒருமை வினைமுற்றுக்கள் சில கூறு.
4. பன்மை வினைமுற்றுக்கள் சில கூறு.

## 10. இடம்

இடமாவது பெயர்வினைச் சொற்கள் பேச்சில் பொருந்தி வரும் இடமாம். அது தன்மை, முன் னிலை, படர்க்கை என மூவகைப்படும்.

தன்மையாவது பேசுவோன் இடமாம்.

முன்னிலையாவது பேசுவதைக் கேட்க முன்னிற் போன் இடமாகும்.

படர்க்கையாவது தன்மை முன்னிலை இடத்தவர்களால் பேசப்படும் செய்தி படரும் இடமாம். தன்மை முன்னிலை இடம் அல்லாதனவெல்லாம் படர்க்கை இடமாகும்.

(உ-ம்): நான், யான்—*தன்மை ஒருமை*; நாம், யாம், நாங்கள், யாங்கள்—*தன்மைப் பன்மை*; நீ — *முன்னிலை ஒருமை*; நீர், நீயிர், நீவிர், நீங்கள் — *முன்னிலைப்பன்மை*.

தன்மை முன்னிலைகளில் *திணை*, பால் இவை தோன்ரு; எண் மட்டும் தோன்றும். எவ்வாறெனில்: ஒரு ஆணும் தன்னைக் குறித்து நான் என்று கூறலாம். ஒரு பெண்ணும் தன்னைக் குறித்து நான் என்று கூறலாம். ஒரு பறவை தன் வரலாற்றைக் கூறுவதுபோலக் கூறினுல், அப்போது அது தன்னைக் குறித்து நான் என்றே கூறவேண்டியிருக்கும்.

இவ்வாறே முன்னிலையிலும் ஒரு ஆணையோ அல்லது ஒரு பெண்ணையோ அல்லது அஃறிணைப் பொருளையோ குறிக்க வேண்டுமானுல் நீ என்றுதான் குறிக்க வேண்டும். தன்மை முன்னிலைகளில் பல பொருள்களைக் குறிக்கும்போதும் இவ்வாறே நாம், நாங்கள், நீவிர், நீங்கள் எனக் குறிக்க வேண்டும்.

வினைச்சொற்களிலும் இவ்வாறே தன்மை முன்னிலைகளில் *திணை*பால்கள் தோன்ருமலிருப்பதையும், எண் மட்டும் தோன்றுவதையும் அடியிற் காட்டும் உதாரணங்களாற் காண்க.

(உ-ம்) *சென்றேன்*—இவ்வாறு ஒரு ஆணும் கூறலாம்; ஒரு பெண்ணும் கூறலாம்; ஒரு அஃறிணைப் பொருளும் கூறுவதாகக் கூறலாம்.

*வந்தோம்*—பல ஆண்களும் இவ்வாறு கூற லாம்; பல பெண்களும் இவ்வாறு கூறலாம்; பல அஃறிணைப் பொருள்களும் இவ்வாறு கூறுவதாகக் கூறலாம்.

*கண்டாய்*—ஒரு ஆணை நோக்கியும் இவ்வாறு கூறலாம்; ஒரு பெண்ணை நோக்கியும் இவ்வாறு கூற லாம்; ஒரு அஃறிணைப் பொருளை நோக்கியும் இவ்வாறு கூறலாம்.

*கண்டீர்கள்*—பல ஆண்களைப் பார்த்தும் இவ் வாறு கூறலாம்; பல பெண்களைப் பார்த்தும் இவ்வாறு கூறலாம்; பல அஃறிணைப் பொருள்களைப் பார்த்தும் இவ்வாறு கூறலாம்.

*அவன், அவள், அவர்கள், அது, அவை*—இவை எல்லாம் படர்க்கை இடமாகும். மேற்சொன்ன உதாரணங்களிலிருந்து படர்க்கையில் திணை, பால், எண் ஆகிய மூன்றும் தோன்றும் என அறியலாம்.

படர்க்கை வினைச் சொற்களிலும் இவ்வாறே திணை, பால், எண் ஆகிய எல்லாம் தோன்றும்.

*சொன்னான்* —இது ஆண்பாலைக் குறித்தது.
*சொன்னாள்* —இது பெண்பாலைக் குறித்தது.
*சொன்னார்கள்*—இது பலர்பாலைக் குறித்தது.

சொன்னது — இது ஒன்றன்பாலைக் குறித்தது.

சொல்லின — இது பலவின்பாலைக் குறித்தது.

## பயிற்சி

1. மூவிடங்களையும் முறையே குறிக்கும் பெயர்வினைச் சொற்கள் பயின்று வருமாறு பத்து வாக்கியங்கள் எழுதுக.
2. தன்மை முன்னிலைகளில் என்னென்ன தோன்ரு? என்ன தோன்றும்? காரணங் கூறுக?
3. படர்க்கையில் என்னென்ன தோன்றும்? உதாரணங் கூறி விளக்குக?

# 11. வேற்றுமை

பின் கண்டவைகளைக் கவனி:—

(1) வேலன் கண்டான்.

(2) வேலனைக் கண்டான்.

இங்குக் காட்டியுள்ள முதல் வாக்கியத்தால் வேலன் ஏதோ ஒன்றைக் கண்டான் என்னும் பொருள் ஏற்படுகிறது. இரண்டாவது வாக்கியத்தால் வேலனை யாரோ ஒருவன் கண்டான் என்னும் பொருள் ஏற்படுகிறது. இவ்வாறு பொருள் வேறு படுவதற்கு ஐ என்பது காரணமாக இருத்தல் காண்க.

*தெரிந்துகொள் :*

பெயரின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை எனப்படும். பொருளை வேறுபடுத்துவதற்காக வரும் சொற்கள் **வேற்றுமை உருபுகள்** எனப்படும்.

வேற்றுமை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றும் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறும் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எட்டு வகைப்படும்.

*முதல் வேற்றுமை:* பெயர்ச்சொல் பயனிலைக்கு எழுவாயாக வரும்போது முதல் வேற்றுமையாகும். இதற்கு உருபு இல்லை,

(உ-ம்) **கண்ணன் கண்டான்.** இங்குக் கண்ணன் என்னும் பெயர், கண்டான் என்னும் பயனிலைக்கு எழுவாயாக வந்ததனால் முதல் வேற்றுமை ஆகும்.

*இரண்டாம் வேற்றுமை:* இதன் உருபு ***ஐ*** என்பது. இதன் பொருள் செயப்படுபொருள். அதாவது, இவ்வேற்றுமையை ஏற்ற பெயர் செயப்படுபொருளாக இருக்கும்.

(உ-ம்) **கண்ணனைக் கண்டான்** இங்குக் கண்ணனை என்பது செயப்படுப் பொருள். அதனால் இரண்டாம் வேற்றுமையாகும்.

*மூன்றும் வேற்றுமை:* **ஆல், ஆன், ஒடு, ஓடு உடன்** என்பவை இவ்வேற்றுமையின் உருபுகளாம்.

கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி என்னும் மூன்று பொருள்களில் இவ்வேற்றுமை வரும்.

(உ-ம்) கத்தியால் அறுத்தான் } கருவிப் பொருளில்
கத்தியான் அறுத்தான் } வந்தன.

வேலனால் ஆக்கப்பட்டது } கருத்தாப் பொரு
வேலனன் ஆக்கப்பட்டது } ளில் வந்தன.

கந்தனொடு வந்தான் }
கந்தனோடு வந்தான் } உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தன.
கந்தனுடன் வந்தான் }

*நான்காம் வேற்றுமை:* இதன் உருபு கு என்பது. இதற்கு இது என வருதல் இதன் பொருளாம். அதாவது கோடற்பொருள் இதன் பொருளாகும்.

(உ-ம்) பரிசிலர்க்குப் பொன் கொடுத்தான்.
காப்பிற்குப் பொன் கொடுத்தான்.

பரிசிலர்க்கு, காப்பிற்கு என்பன கோடற் பொருளில் வந்தமை அறிக.

*ஐந்தாம் வேற்றுமை:* இல், இன் என்பவை இதன் உருபுகளாகும். இவற்றோடு முறையே இருந்து, நின்று என்பன சேர்ந்து வரும். நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்பன இதன் பொருளாம்.

(உ-ம்) வீட்டின் நீங்கினான்) —நீங்கற் பொருள்.

இராமனின் கந்தன் பெரியன் }
இராமனில் கந்தன் பெரியன் } ஒப்புப் பொருள்

நாகையின் வடக்குச்
சென்னை—எல்லைப் பொருள்.

கல்வியில் பெரியர்
கம்பர்—எதுப் பொருள்.

மதுரையிலிருந்து வந்தார்—இல் என்பதோடு இருந்து என்பது சேர்ந்து வந்தது.

மதுரையினின்று வந்தார்--இன் என்பதோடு நின்று என்பது சேர்ந்து வந்தது.

ஆரும் வேற்றுமை: அது, உடைய என்பன இதன் உருபுகள். இதன் பொருள் கிழமைப் பொருள். (கிழமை=உரிமை).

(உ-ம்) வேலனது புத்தகம்.
வேலனுடைய புத்தகம்.

இவை கிழமைப் பொருளில் வந்தன காண்க.

ஏழாம் வேற்றுமை: கண், இல், இடத்தில் முதலியன இதன் உருபுகளாகும். இதன் பொருள் இடப்பொருளாம். அதாவது இவ்வேற்றுமையை ஏற்ற சொல், பொருள்களுக்கு இடமாய் நிற்கும்.

(உ—ம்) மனைக்கண் மனைவி இருந்தாள்.
மரத்தில் காக்கை இருந்தது.
அவனிடத்தில் புத்தகம் இருந்தது.

மனைக்கண், மரத்தில், அவனிடத்தில் என்பன இடப்பொருளில் வந்தன காண்க.

**எட்டாம் வேற்றுமை:** பெயர்களின் ஈற்றில் உண்டாகும் சில மாறுபாடுகள் இதன் உருபாம். இதன் பொருள் விளித்தற் பொருள்; அதாவது அழைத்தற் பொருள். இதனால் இதை விளி வேற்றுமை என்றும் சொல்வார்கள்.

(உ-ம்) தம்பீ வா—இங்கு ஈறு நீண்டது.
அண்ணா, தா—இங்கு ஈற்றெழுத்துப் போய், ஈற்றயலெழுத்து நீண்டது
தங்காய் நில்—இங்கு ஐ என்பது ஆய் எனத் திரிந்தது.

வினைச்சொல்லிற்கு வேற்றுமை கிடையாது. பெயர்ச் சொல்லிற்கு மட்டுமே வேற்றுமை உண்டு.

## பயிற்சி

1. பின்கண்ட சொற்களில் எட்டு வேற்றுமைகளையும் முறையே பொருத்திக் காட்டுக:

கமலம், கண்ணன், காக்கை, மரம், வண்டு.

2. பின்கண்ட வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள பெயர்ச்சொற்கள் எவ்வெவ் வேற்றுமையில் எவ்வெப் பொருளில் வந்தனவெனக் கூறுக.

(1) முருகா, நீ எங்கே சென்றிருந்தாய்?
(2) முனியன் தோட்டத்தினின்று காய்கறிகளைக் கொணர்ந்தான்.
(3) தச்சனிடம் மேஜைக்குப் பலகை கொடுக்கப் பட்டது.
(4) இராமனால் வீடு நன்கு கட்டப்பட்டது.
(5) என்னுடைய புத்தகம் கந்தனிடத்தில் இருந்தது.

## 12. சொல்லிலக்கணம் கூறுதல்

பெயர்ச்சொல்லில் திணை, பால், எண், இடம் இவற்றை அறியலாம். பெயர்ச்சொல் வேற்றுமையை ஏற்று வரும். ஆகையால் பெயர்ச்சொல்லுக்கு இலக்கணம் கூறும்போது, **திணை, பால், எண், இடம், வேற்றுமை** இவைகளைக் குறிப்பிடவேண்டும்.

(உ-ம்) *நீ* எங்குச் சென்றாய் என்று என்னை வேலன் கேட்டான்.

இவ்வாக்கியத்தில் *நீ, என்னை,* வேலன் என்பன பெயர்ச்சொற்கள். இவற்றின் இலக்கணம் பின் வருமாறு:—

*நீ*—முன்னிலை ஒருமைப்பெயர் முதல் வேற்றுமையை ஏற்றது.

*என்னை*—தன்மை ஒருமைப்பெயர் இரண்டாம் வேற்றுமையை ஏற்றது.

தன்மை முன்னிலைகளில் திணை, பால்கள் தோன்ரு. ஆகையால் அவை கூறப்படவில்லை.

*வேலன்*—ஆண்பாற் பெயர் முதல் வேற்றுமையை ஏற்றது. பால் கூறவே திணை, பால், எண், இடம் ஆகியவை கூறியவாருயிற்று.

வினைமுற்றில் திணை, பால், எண், இடம் இவற்றை அறியலாம். வினைமுற்று காலத்தை ஏற்று வரும். ஆகையால் வினைமுற்றுக்கு இலக்கணம்

கூறும்போது, திணை, பால், எண், இடம், காலம் இவற்றைக் குறிப்பிட வேண்டும்.

(உ-ம்) 1. நாங்கள் வீடு திரும்பினோம்.
2. நீ என்ன செய்கிறாய்?
3. அரசன் கோயிலைக் கட்டுவான்.

இங்குக் காட்டிய உதாரணங்களில் திரும்பினோம், செய்கிறாய், கட்டுவான் என்பன வினை முற்றுக்கள். இவற்றின் இலக்கணம் பின்வருமாறு:

1. **திரும்பினோம்—தன்மைப் பன்மை இறந்த கால வினைமுற்று.**

2. செய்கிறாய்—முன்னிலை ஒருமை நிகழ்கால வினைமுற்று. தன்மை முன்னிலைகளில் திணைபால்கள் தோன்றா; ஆதலால் அவை கூறப்படவில்லை.

3. கட்டுவான்—ஆண்பால் எதிர்கால வினை முற்று. பால் கூறவே, திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் கூறியவாறாயிற்று.

## பயிற்சி

**பின்கண்ட வாக்கியங்களில் தடித்த சொற்களுக்கு இலக்கணம் கூறுக.**

1. **தானே நான் வருவேன்.**
2. வேலா, **நீ** அங்கே வா.
3. பார்வதி தினமும் பள்ளிக்குப் **போகிறாள்.**
4. மாடத்தில் விளக்கு இருந்தது.
5. மரத்தில் உள்ள பழங்களைக் கல்லால் **அடித்தான்.**

## 13. சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடுதல்

சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடும் விதத்தைப்பற்றிச் சென்ற வகுப்பில் சிறிது அறிந்தீர்கள். இவ்வகுப்பிலும் அதைப்பற்றிச் சிறிது தெரிந்து கொள்ளுங்கள்.

ஒரே சொல்லும் சில சமயங்களில் பொருளில் நுட்பமாக வேறுபடுவது உண்டு,

(உ-ம்) 1. அவன் சாலையில் நடந்தான்
2. அவன் பேசாமல் நடந்தான்.
3. அவன் நல்வழியில் நடந்தான்

மேற்கண்ட உதாரணங்களில் நடந்தான் என்னும்சொல் பொருளில் நுட்பமாக வேறுபடுகிறது. எங்ஙனமெனில், முதல் வாக்கியத்தில் நடந்தான் என்பது காலால் நடப்பதைக் குறித்தது.

இரண்டாம் வாக்கியத்தில் நடந்தான் என்பது கோபத்துடனோ அல்லது விசனத்துடனோ சென்றான் என்று பொருள்படுகிறது.

மூன்றாம் வாக்கியத்தில் நடந்தான் என்பது கடைப்பிடித்தான் எனப் பொருள்படுகிறது.

இனி மற்றொரு உதாரணம் கூறுவோம்.

(உ-ம்) 1. குமரன் மரத்தைக் கண்டான்.
2. குமரன் நாடு கண்டான்.
3. குமரன் பொருள் கண்டான்.
4. குமரன் உரை கண்டான்.

மேற்கண்ட வாக்கியங்களில் கண்டான் என்னும் சொல் பொருளில் பலவகையாக வேறுபடுகிறது. எங்ஙனமெனில், முதல் வாக்கியத்தில் கண்டான் என்பது பார்த்தான் எனப் பொருள்படுகிறது.

இரண்டாம் வாக்கியத்தில் கண்டான் என்பது சுற்றிப்பார்த்தான் எனப் பொருள் படுகிறது.

மூன்றும் வாக்கியத்தில் கண்டான் என்பது ஆராய்ந்து கண்டறிந்தான் எனப் பொருள் படுகிறது.

நான்காம் வாக்கியத்தில் கண்டான் என்பது இயற்றினன் எனப் பொருள்படுகிறது.

## பயிற்சி

மேற்கண்டவற்றைப் போல் நீங்கள் சில உதாரணங்களைக் கூறுங்கள்.

# IV. புணர்ச்சி

## 1. எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி

எண்ணுப் பெயர்கள் தம்மோடு தாம் புணரும் போதும், பிற பெயர்களோடு புணரும்போதும் பல வகையான மாறுபாடுகளை அடைகின்றன. அவற்றைப்பற்றி இப்போது தெரிந்து கொள்வோம்.

பின்கண்டவற்றைக் கவனி:

(உ-ம்) ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்
ஒன்று + ஆடு = ஓராடு
இரண்டு + ஆயிரம் = ஈராயிரம்
இரண்டு + ஆடு = ஈராடு

இவை எப்படி புணர்ந்தன? ஒன்று, இரண்டு என்னும் எண்ணுப் பெயர்களின் இறுதியில் உள்ள எழுத்துக்கள் கெட்டன. முதலெழுத்து நீண்டது. வருமொழி முதலில் உயிர் வந்தால் இவை இப்படி புணரும்.

(உ-ம்) மூன்று + ஆயிரம் = மூவாயிரம்
மூன்று + ஆடு = மூவாடு
நான்கு + ஆயிரம் = நான்காயிரம்
நான்கு + ஆடு = நாலாடு
ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்
ஐந்து + ஆடு = ஐயாடு

மேற்கண்ட உதாரணங்களில் மூன்று, நான்கு, ஐந்து என்னும் எண்களின் ஈறு கெட்டன. நான்கு என்பதிலுள்ள னகரம் லகரமாயிற்று.

(உ-ம்) ஆறு + ஆயிரம் = ஆறாயிரம்
ஆறு + ஆடு = ஆறாடு
ஏழு + ஆயிரம் = ஏழாயிரம்
ஏழு + ஆடு = ஏழாடு

இவற்றில் ஆறு, ஏழு என்பனவற்றின் ஈற்றிலுள்ள உகரம் கெட்டது.

(உ-ம்) எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்
எட்டு + ஆடு = எட்டாடு

இங்கு முதல் உதாரணத்தில் நிலைமொழி ஈறு கெட்டு டகரம் ணகரமாகத் திரிந்தது; இரண்டாவது உதாரணத்தில் ஈற்று உகரம் கெட்டது.

(உ-ம்) ஒன்பது + ஆயிரம் = ஒன்பதினாயிரம்
ஒன்பது + ஆடு = ஒன்பதாடு
பத்து + ஆயிரம் = பதினாயிரம்
பத்து + ஆடு = பத்தாடு

ஒன்பது என்பது ஆயிரம் என்பதோடு புணரும் போது இன் என்பதைப் பெற்றது; ஆடு என்பதோடு புணரும்போது இன் பெறவில்லை. பத்து என்பது ஆயிரத்தோடு புணரும்போது ஈறுகெட்டு இன் என்பதைப் பெற்றது; ஆடு என்பதோடு புணரும் போது ஈற்று உகரம் கெட்டது.

இனிப் பல்வேறு எண்களும் பல்வேறு சொற்களோடு புணரும் விதத்தை அடியிற் காண்க:

(உ-ம்) ஒன்று + பொருள் = ஒரு பொருள்
இரண்டு + பொருள் = இரு பொருள்

| | | | | |
|---|---|---|---|---|
| மூன்று | + | பழம் | = | முப்பழம் |
| நான்கு | + | பணம் | = | நாற்பணம் |
| ஐந்து | + | பொருள் | = | ஐம்பொருள் |
| ஆறு | + | வகை | = | அறுவகை |
| ஏழு | + | வகை | = | எழுவகை |
| எட்டு | + | பொருள் | = | எண்பொருள் |
| ஒன்பது | + | வகை | = | ஒன்பதுவகை |
| பத்து | + | பொருள் | = | பத்துப் பொருள் |

இவை பல வகையாகப் புணர்ந்தன.

பின்வரும் உதாரணங்களில் வருமொழியாகிய *பத்து* என்பதன் இடையில் உள்ள தகரம் கெடுவது காண்க:

(உ-ம்)

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்று | + | பத்து | = | ஒருபது |
| இரண்டு | + | பத்து | = | இருபது |
| மூன்று | + | பத்து | = | முப்பது |
| நான்கு | + | பத்து | = | நாற்பது |
| ஐந்து | + | பத்து | = | ஐம்பது |
| ஆறு | + | பத்து | = | அறுபது |
| ஏழு | + | பத்து | = | எழுபது |
| எட்டு | + | பத்து | = | எண்பது |

*ஒன்பது* என்பது *பத்து*, *நூறு* இவற்றோடு சேரும்போது விநோத மாறுபாட்டை அடைகிறது.

(உ-ம்) ஒன்பது + பத்து = தொன்பது + நூறு = தொள் + நூறு = தொண்ணூறு.

ஒன்பது + நூறு = தொன்பது + ஆயிரம் = தொள் + ஆயிரம் = தொளாயிரம்.

பின்கண்ட புணர்ச்சியில் இன் வருவது காண்க.

(உ-ம்) பத்து + ஒன்று = பதினொன்று
பத்து + இரண்டு = பன்னிரண்டு

இவ்வாறு எட்டு வரையில் வரும். பிறகு,

(உ-ம்) பத்து + ஒன்பது = பத்தொன்பது

என ஒன்பதோடு சேரும். மேலும் சில உதாரணங்களில் வேறு விகாரங்கள் அடைவது காண்க.

(உ-ம்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒன்று | + | ஒன்று | = | ஒவ்வொன்று |
| இரண்டு | + | இரண்டு | = | இவ்விரண்டு |
| மூன்று | + | மூன்று | = | மும்மூன்று |
| நான்கு | + | நான்கு | = | நந்நான்கு |
| ஐந்து | + | ஐந்து | = | ஐவைந்து |
| ஆறு | + | ஆறு | = | அவ்வாறு |
| ஏழு | + | ஏழு | = | எவ்வேழு |
| எட்டு | + | எட்டு | = | எவ்வெட்டு |
| பத்து | + | பத்து | = | பப்பத்து |

## 2, உயிர் முன் உயிர் புணர்தல்

### உடம்படு மெய் பெறுதல்

பின் கண்டவற்றைக் கவனி:

| | | | | |
|---|---|---|---|---|
| மணி | + | அடி | = | மணியடி |
| தேனீ | + | இருந்தது | = | தேனீயிருந்தது |
| பனை | + | ஒலை | = | பனையோலை |

நிலைமொழி ஈற்றில் இ, ஈ, ஐ, என்னும் எழுத்துக்கள் இருக்க, வருமொழி முதலில் உயிர்வந்து

புணர்ந்தால், இடையில் யகர உடம்படுமெய் தோன்றும்.

வேலனே + எழுந்தான் = வேலனே யெழுந்தான்
தே + ஆரம் = தேவாரம்
சே + அடி = சேயடி (சேவடி)

நிலைமொழி ஈற்றில் ஏகாரம் இருக்க, வருமொழி முதலில் உயிர் வந்து புணருமானால், யகர வுடம்படு மெய்யேனும், வகர வுடம்படு மெய்யேனும் வரும்.

பல + ஏணி = பலவேணி
பலா + இலை = பலாவிலை
நடு + இடம் = நடுவிடம்
பூ + எடு = பூவெடு
கோ + இல் = கோவில்

நிலைமொழி ஈற்றில் அ, ஆ, உ, ஊ, ஓ, ஒ, ஔ, என்னும் உயிர் எழுத்துக்கள் இருக்க, வருமொழி முதலில் உயிர் வந்து புணர்ந்தால், வகர வுடம்படு மெய் வரும்.

## 3. வல்லெழுத்து மிகும் இடங்கள்

வாழை + காய் = வாழைக்காய்
பலா + சுளை = பலாச்சுளை
குடி + கூலி = குடிக்கூலி

நிலைமொழி ஈற்றில் உயிரெழுத்து இருக்க, வருமொழி முதலில் வல்லினம் வந்து புணர்ந்தால் இடையில் வல்லினம் மிகும்.

படத்தை + பார் = படத்தைப் பார்
எனக்கு + கொடு = எனக்குக் கொடு

ஐ, கு என்னும் வேற்றுமை உருபுகளுக்கு முன் வரும் வல்லினம் மிகும்.

படிக்க + சென்றான் = படிக்கச்சென்றான்
ஓடி + போனான் = ஓடிப்போனான்
போய் + சேர்ந்தான் = போய்ச்சேர்ந்தான்

அ, இ, ய் என முடியும் வினையெச்சங்களின் முன் வரும் வல்லினம் மிகும்.

## 4. மகர ஈறு

### மகர ஈற்றின் முன் வல்லினம்

பணம் + பெட்டி = பணப்பெட்டி
குணம் + குன்று = குணக்குன்று

மகர ஈற்றின்முன் வல்லினம் வரச் சில இடங்களில் மகரம் கெட்டு வல்லினம் மிகும்.

### மகர ஈற்றின் முன் மெல்லினம்

மரம் + நார் = மரநார்
மரம் + முறிந்தது = மரமுறிந்தது

மகர ஈற்றின் முன் மெல்லினம் வர, மகரம் கெட்டது.

### மகர ஈற்றின் முன் இடையினம்

மரம் + வேர் = மரவேர்
நிலம் + வரி = நிலவரி

மகர ஈற்றின்முன் இடையினம் வர, மகரம் கெட்டது.

## பயிற்சி

1. பின் வரும் எண்ணுப் பெயர்களைச் சேர்க்க.

| | |
|---|---|
| ஒன்று + நூறு | எட்டு + எட்டு |
| பத்து + ஏழு | ஒன்று + ஆறு |
| நூறு + ஆயிரம் | ஐந்து + ஆடு |
| பத்து + பத்து | ஆறு + பொருள் |
| ஐந்து + நூறு | ஏழு + கடல் |
| ஒன்பது + பத்து | பத்து + ஆயிரம் |
| ஒன்பது + நூறு | எட்டு + வகை |

2. பின் வரும் சொற்களைச் சேர்த்து இவை எவ்வாறு புணர்ந்தன எனக் கூறுக.

| | |
|---|---|
| கோ + இல் | எதை + கண்டான் |
| இலை + எடு | உனக்கு + கொடுத்தான் |
| தே + ஆரம் | போய் + கண்டான் |
| பணம் + பை | தேடி + திரிந்தான் |
| பலா + பழம் | எரிக்க + பார்த்தான் |
| மரம் + வேர் | மனம் + மாறியது |

# V. அணி

அணி என்பதற்கு அழகு என்பது பொருள். இங்கு அணி செய்யுளிலும் உரை நடையிலும் வழங்கி வரும் அழகைக் குறிக்கிறது.

பின்வருவனவற்றைக் கவனி:

(1) அந்த ஆடை வெண்மையானது.
(2) அந்த ஆடை பால்போல வெண்மையானது.

இங்கு முதல் வாக்கியத்தைவிட, இரண்டாவது வாக்கியம் அழகாக அமைந்திருப்பது காண்க.

அணிகளில் பலவகை உண்டு. அவற்றுள் இங்கு உவமை, உருவகம் என்னும் இரண்டைப்பற்றிக் கூறுவோம்.

## 1. உவமை அணி

(1) அவனது முகம் தாமரை போல மலர்ந்தது.
(2) அவளது கண்கள் கோவைப்பழம் போலச் சிவந்தன.

மேற்கண்ட உதாரணங்களில் இதுபோல இது இருந்தது எனக் கூறப்படுகிறது அல்லவா? இப்படி அமைந்து வருவதுதான் உவமை அணி.

மேற்கண்ட முதல் உதாரணத்தில் முகம் என்னும் பொருள் இப்படி இருந்தது என விளக்கப்பட்டுள்ளது. இரண்டாவது உதாரணத்தில் அப்படி விளக்கப்படும் பொருள் கண்கள்.

உவமை அணியில் விளக்கப்படும் பொருள் உவமேயம் எனப்படும்.

உவமேயத்தை விளக்குவதற்காக வரும் பொருள் உவமானம் எனப்படும்.

மேற்கண்ட உதாரணங்களுள் தாமரை, கோவைப் பழம் ஆகியவை உவமானம்.

முகம், கண்கள் இவை உவமேயம்.

உவமையணியில் உவமானத்தால் உவமேயத்தை விளக்குவதற்காகப் போல என்பது வந்துள்ளது. இது உவம உருபு எனப்படும்.

போல, புரைய, ஒப்ப, உறழ, மான, நேர, நிகர, அன்ன முதலியவை உவம உருபுகளாக வரும்.

உவமேயத்தை உவமானத்தால் விளக்குவதற்கு அவ்விரண்டிற்கும் இடையில் ஒரு பொதுத் தன்மை இருக்கவேண்டும். மேற்கண்ட முதல் உதாரணத்தில் மலர்ந்திருந்தல் பொதுத்தன்மை; இரண்டாவது உதாரணத்தில் சிவந்தல் பொதுத்தன்மை. ஆகவே உவமையணியில் உவமானம், உவமேயம், உவமவுருபு, பொதுத்தன்மை என நான்கு உறுப்புக்கள் உண்டு.

## பயிற்சி

1. பின் கண்ட உவமைகளில் உவமவுறுப்புக்கள் நான்கையும் தனித்தனி அட்டவணையிட்டு எடுத்தெழுது:—

(1) வேடன் புலிபோல பாய்ந்தான்.

(2) குதிரை காற்றெனெ வேகமாய் ஓடிற்று.

(3) அவன் காக்கையைப்போலக் கறுப்பாய் இருந்தான்.
(4) வள்ளி தேன் ஒப்ப இனிமையாய்ப் பாடினாள்.
(5) நிலவு பால்போல வெண்மையாய் எறித்தது.

அட்டவணை

| வாக்கியத்தின் எண் | உவமானம் | உவமேயம் | உவம உருபு | பொதுத் தன்மை |
|---|---|---|---|---|
| | | | | |

## 2. உருவக அணி

1. அவன் அவரது தாமரை போன்ற பாதங்களை வணங்கினான்.

2. அவன் அவரது பாதத் தாமரைகளை வணங்கினான்.

இங்கு முதல் வாக்கியத்தில் பாதங்கள் தாமரை போல இருந்தன என்பது பொருளாகிறது. இரண்டாவது வாக்கியத்தில் பாதங்கள் தாமரையாகவே கூறப்பட்டுவிட்டன. இவற்றுள் முதல் வாக்கியத்தில் உள்ள அணி, உவமை அணி என்பதை நீங்கள் அறிவீர்கள். அதில் உவமானம், உவமேயம் இரண்டும் வேறு வேருகக் குறிக்கப்படுகின்றன. இங்கு இரண்டாவது வாக்கியத்தில் உவமானத்தின் தன்மையை உவமேயத்தின் மேல் ஏற்றி இரண்டையும் ஒன்ருகக் கூறப்பட்டுள்ளது.

அதாவது உவமேயத்தையே உவமானப் பொருளாக ஆக்கியிருக்கிறது. இவ்வாறு வருவது **உருவக அணி** என்று சொல்லப்படும்.

உவமை அணிக்கும் உருவக அணிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டைப் பின்வரும் உதாரணங்களால் அறிக.

மதிபோன்ற முகம் அல்லது மதிமுகம் } — முகமதி
பவளம் போன்ற வாய் அல்லது பவளவாய் } — வாய்ப்பவளம்

இவையன்றி, பாவை போன்றவளைப் *பாவை* என்று கூறுவதும், சிங்கம் போன்றவனைச் *சிங்கம்* என்று கூறுவதும் உருவக அணியே:

## பயிற்சி

1. உருவக அணிக்குச் சில உதாரணங்கள் சொல்லு.
2. உவமை அணிக்கும் அதற்கும் உள்ள வேறுபாடு யாது?
3. பின்வரும் உவமையை உருவகம் ஆக்குக.
   (1) குவளை போன்ற கண்கள்
   (2) பொன் போன்ற மேனி.
4. பின்வரும் உருவகத்தை உவமையணியாகக் கூறு.
   (1) பாத கமலம்
   (2) குணக்குன்று.

# VI. நிறுத்தற் குறிகள்

சென்ற வகுப்பில் நீங்கள் காற்புள்ளி, அரைப் புள்ளி, முக்காற் புள்ளி, முற்றுப் புள்ளி, வினுக்குறி, வியப்புக்குறி, என்பவைகளைப் பற்றி அறிந்தீர்கள். இவ்வகுப்பில் மேற்கோள் குறிகளைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.

சொற்றொடரின் முன்னும் பின்னுமாக முறையே "தினமணி" இவ்வாறு மேற்கோட்குறிகள் இடப் படும். மற்று, 'தினமணி' இப்படியுங்கூட இது இடப் படுவது உண்டு. இக்குறி எவ்வெச் சந்தர்ப்பங்களில் இடுவர் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

*கண்ணன் தன் அண்ணனைப் பார்த்து, "நீ என்னைக் கடைக்குக் கூட்டிச்செல்" என்றான்.*

மேற்கண்டவாறு ஒருவன் கூறியதை அப்படியே குறிப்பிடும் இடங்களில் இக் குறிகள் இடப்படும்.

*அவன் "திருவள்ளுவர்"ப் படித்தான்.*

இவ்வாறு பிரசித்தமான ஒன்றைக் குறிப்பிடும் போதும் இக்குறி இடப்படும்.

*தாய் தன் மகனை அன்பாகக் "கண்ணே" என்று அழைத்தாள்.*

இவ்வாறு ஒன்றைச் சிறப்பாக எடுத்துச் சொல்லும்போதும் இக்குறி இடுவது உண்டு.

பொருளின் பெயரை உணர்த்துவது "பொருட் பெயர்".

இவ்வாறு வாக்கியத்தில் முக்கியமான சொல்லைக் குறிப்பதற்கும் இக்குறி இடுவது உண்டு.

## பயிற்சி

பின்கண்ட வாக்கியங்களில் தக்க இடங்களில் மேற்கோட் குறிகளை இடுக.

1. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்கும் அறிவிலிகளே. கேளுங்கள்: நீங்கள் அவ்வாறு செய்யக்கூடாது என்று நல்வழியில் கூறப்பட்டுள்ளது.

2. வேலன் தந்தை அவனை நோக்கி, நீ இவ்வாறெல்லாம் தவறு செய்தால் நான் உன்னைக் கடுமையாகத் தண்டிப்பேன்' என்றார்.

3. ஆலும் வேலும் பல்லுக் குறுதி என்பது ஒரு பழமொழி'

4. நீ நாலடியார் வாசித்தாயா?

5. தினமும் சுதேசமித்திரன் படிப்பது என் வழக்கம்;

## பயிற்சி வினாக்கள்

1. கொடுந்தமிழ்ச் சொற்கள் சில கூறி அதற்கு இணையான செந்தமிழ்ச் சொற்களையும் எடுத்து எழுதுக.

2. பின்வரும் கொடுந்தமிழ்ச் சொற்களுக்கு இணையான செந்தமிழ்ச் சொற்கள் எவை?

அச்சன், வெள்ளம், இகுளை, செய், பாழி

3. பின்வரும் வினைமுற்றுக்களில் பகுதி, விகுதி இடைநிலை இவற்றை எடுத்துக் காட்டுக;

செய்தான், நின்றேன், பார்த்தோம், வாரா நின்றான், படிக்கிறான், செய்கிறீர், வருவீர்கள், தருவாய்,

4. பின்வரும் வழுஉச் சொற்றொடர்களைத் திருத்திக் கூறுக.

காக்கைக்குட்டி, குதிரைக் குஞ்சு, நரி பிளிறுகிறது. யானை கரைகிறது. கோழி கத்துகிறது. பசுக்கள் வந்தது. அவன் சொன்னாள்.

5 பால் இட வழுவமைதிக்கு முறையே ஒவ்வொரு உதாரணம் கொடுக்க.

6. கீழ் வரும் வாக்கியங்களிலுள்ள வினைமுற்று. பெயரெச்சம், வினையெச்சம் இவற்றைத் தனியே எடுத்து எழுதுக:

(1) கமலம் பாட்டுப்பாடி முடித்தாள்.

(2) அன்று வந்த சிறுவன் இதோ வருகிறான்.

(3) நாய் மிக விரைவாய் ஓடி அவனைக் கடித்தது.

(4) படித்த பையன் தேர்வில் தேறுவான்.

(5) கண்ணன் துரத்திச் சென்று அந்த மாட்டைப் பிடித்தான்.

7. பின் வரும் வினைமுற்றுக்கள் இன்னகால வினைமுற்றுக்கள் எனக் கூறு.

கண்டான், தருகின்றேன், நின்றாய், உண்ணுநின்றான், படிப்பாள், அறிந்தேன்.

8. பின்வரும் சொற்களில் எட்டு வேற்றுமைகளையும் பொருத்திக் காட்டுக.

கந்தன், சீதை, மான், காக்கை, அரசன், தம்பி.

9. பின் வரும் வாக்கியங்களிலுள்ள பெயர் வினைச்சொற்களுக்குச் சொல்லிலக்கணம் கூறுக.

(1) நீ எங்கே அவனைக் கண்டாய்?

(2) நான் நேற்று ஊரிலிருந்து வந்தேன்.

(3) மரத்தில் பழங்கள் நிறையப் பழுத்திருக்கின்றன.

(4) கண்ணனது பலகையைக் கமலம் வைத்திருக்கிருள்.

(5) அவனுக்கு உனது பலகையைக் கொடுத்தாயா?

10. கீழ்வருவனவற்றை ஒன்று சேர்:

ஒன்று+பலகை; இரண்டு+ஆயிரம்; பத்து+பத்து; ஒன்பது+நூறு; ஆறு+ஆறு; எட்டு+சாண்; அவனே + அடித்தான்; சே + அடி; கோ + இல்; தே+ஆரம்; நிற்க+மாண்டான்; போய்+பார்த்தான்; மனம்+மாற்றம்.

11. கீழ்வருவனவற்றைப் பிரித்துக் கூறு:

நந்நான்கு; ஐயாயிரம், பணத்தட்டு; மணப்பந்தல். மணவோலை, சேயடி, ஓடிப்போனுன், பாத்திரக்கடை.

12. உவம உருவக அணிகளை உதாரணங்களுடன் விளக்கு.

13. பின்வரும் வாக்கியங்களிலுள்ள உவம உருவக அணிகளை எடுத்துக் காட்டு.

(1) அவன் வயிறு விண்ணான் தாழிபோல இருந்தது.

(2) துறவியினது பாதத்தாமரைகளை முருகன் வணங்கினான்.

(3) அவனது மதிமுகம் வியர்த்தது.

(4) குணக்குன்றாகிய அவனை எல்லாரும் போற்றினர்.

14. மேற்கோட் குறிகள் எவ்வெவ்விடங்களில் இடப்படும்? உதாரணத்துடன் விளக்குக.

15. பின்கண்ட வாக்கியங்களில் உரிய இடங்களில் மேற்கோட் குறிகளை இடுக:

(1) நாளை யாவரும் கொடிவணக்கம் செய்ய வேண்டும் என்பது அரசாங்கக் கட்டளை:

(2) நன்னூல் தமிழ்கற்பார்க்குரிய இலக்கணம் ஆகும்.

(3) விரைந்து ஓடி வா என்று அவன் தன் தங்கைக்குக் கூறினான்.

(4) தன் குடிக்கு விளக்கினைப் போன்றவன் அவன்.

(5) இறைவனே என்னை ஆட்கொண்டருள்க என்று அந்தப் பெரியார் கூறினார்.

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்